# என்னுடைய அடையாள விவரம்

## ஒவ்வொரு முறையும்




எந்த சேவையினையும் அல்லது பராமரிப்பினையும் வழங்கும் முன் நாங்கள இரு விதமான வாடிக்கையாளர் அடையாள விவரங்களை எப்போதும் கேட்போம். இந்த நடைமுறை சரியான வாடிக்கையாளர் எப்போதும் சரியான சேவை, செயல்முறை அல்லது மருந்தினை ஒவ்வொரு முறையும் பெறுகிறாரா என்பதை உறுதி செய்கிறது.

## ஹாலந்து ப்ளூர்வியூ குழந்தைகள் மறுவாழ்வு மருத்துவமனை பற்றி

ஹாலந்து ப்ளூர்வியூ குழந்தைகள் மறுவாழ்வு மருத்துவமனையானது குறைபாடுகள் உள்ள குழந்தைகளின் வாழ்க்கையினை மேம்படுத்துவதில் கவனம் செலுத்திவரும் கனடாவின் மாபெரும் குழந்தைகள் மறுவாழ்வு மருத்துவமனையாகும்.

பயன்பாட்டு ஆராய்ச்சி, கற்பித்தல் மற்றும் கற்றல், மற்றும் வாடிக்கையாளர் மற்றும் குடும்பம் மையப்படுத்தப்பட்ட பாதுகாப்பு ஆகியவற்றில் ஹோலண்ட் ப்ளூர்வியூ ஒரு உலகளாவிய தலைவர்.

நாங்கள பெருமூளை வாதம், மூளையதிர்ச்சி உட்பட்ட மரபணுசாராத மூளைக்காயம், தசைநார் தேய்வு, உடல் உறுப்பு துண்டிக்கப்பட்ட, கால்-கை வலிப்பு, ஸ்பைனா பிஃபிடா (மூடப்படாத முதுகுத்தண்டு குறைபாடு), கீல்வாதம், பிளவுபட்ட உதடு மாற்றும் தாடை பிரச்சனை, ஆட்டிசம் மற்றும் பிற உடல் மற்றும் வளர்ச்சி குறைபாடுகள் போன்ற குறைபாடுள்ள குழந்தைகளுக்கான ஒரு மாகாண ஆதார மாற்ற பாதுகாப்பு சேவை மையம் ஆகும்.

ஊனமுற்ற குழந்தைகளுக்கான சாத்தியமான உலகத்தை உருவாக்குவதே எமது நோக்கம் ஆகும்.





**ஹாலந்து ப்ளூர்வியூ குழந்தைகள் மறுவாழ்வு மருத்துவமனை**

150 கேஇல்கோர் சாலை, டொராண்டோ, ஒண்டாரியோ M4G 1R8

தொலைபேசி: 416-425-6220 கட்டணமில்லா இலவச அழைப்பு: 800-363-2440

தொலைநகல்: 416-425-6591 | மின்னஞ்சல்: info@hollandbloorview.ca

**www.hollandbloorview.ca**


[1326.17]

# பாதுகாப்பில் உங்கள் பங்கை புரிந்து கொள்ளுதல்: வாடிக்கையாளர்கள் மற்றும் குடும்பங்கள்

குழந்தை மேம்பாட்டு திட்டம்

Holland Bloorview

Kids Rehabilitation Hospital

## உங்கள் பாதுகாப்பே ஹாலந்து ப்ளூர்வியூவின் முன்னுரிமை ஆகும்.

## நீங்கள், உங்கள் குடும்பம் மற்றும் மருத்துவமனையில் உள்ள அனைவருக்கும் பாதுகாப்பான சூழலை உருவாக்க உதவுவதற்காக இந்த உதவிக்குறிப்புகளைப் பின்பற்றவும்.

## கை கழுவுதல்

உங்கள் கைகளை சுத்தம் செய்தல் கிருமிகள் மற்றும் நோய்த்தொற்றுகளின் பரவலைக் குறைக்கும்.

- நீங்கள் மருத்துவமனையிலும் வாடிக்கையாளர் அறைக்குள்ளும் நுழையும்போது, உணவு அருந்துவதற்கு முன் மற்றும் பின்னர், கழிவறையினை பயன்படுத்திய பிறகு மற்றும் இருமல் அல்லது தும்மலுக்குப் பிறகு சுத்திகரிப்பான் அல்லது சோப்பு மற்றும் தண்ணீருடன் உங்கள் கைகளைக் கழுவவும்.
- கை கழுவிய பின்னர் நீங்கள் எதையும் தொடுவதற்கு முன் உங்கள் கைகளை காய அனுமதிக்கவும்.
- நீங்கள் நோய்வாய்ப்பட்டிருந்தால், நீங்கள் மருத்துவமனை அப்பாயின்மென்ட்டினை மறுபதிவு செய்ய நேரலாம் என்பதால் மருத்துவமனையை அழைக்கவும்.
- உங்கள் உடல்நல பராமரிப்பாளரிடம் அவர் சுத்தப்படுத்தி உள்ளாரா அல்லது கைகளை கழுவிவிட்டாரா என்பதை கேளுங்கள்.

## விழுதலை தடுத்தல்

- நீங்கள் / உங்கள் குழந்தை விழும் ஆபத்து இருப்பதாக உணர்ந்தால் உங்கள் மருத்துவரிடம் தெரிவியுங்கள். உங்கள் முதல் அமர்வுக்கு முன் விழாமல் தடுக்க உங்களின் உத்திகள் என்ன என்பதைப் பற்றி விவாதிக்கவும்.
- காத்திருக்கும் அறைகள் மற்றும் மருத்துவ அறைகளில் உங்கள் குழந்தையை மேற்பார்வை செய்யவும்.
- நீங்கள் / உங்கள் குழந்தை உங்களுடைய சிகிச்சை அமர்வுக்கு பொருத்தமான காலணி அணிந்துள்ளீர்களா என்பதை உறுதி செய்யவும்.
- பாதுகாப்பற்ற நிலைமைகள் மற்றும் எந்தவொரு சம்பவங்களையும் ஊழியர்களுக்கு தெரிவிக்கவும்.



## மருந்து பாதுகாப்பு

உங்களுடைய மருந்து பாதுகாப்பே ஹாலந்து ப்ளூர்வியூவின் முன்னுரிமை ஆகும். மருந்து எடுத்துக்கொள்வதில் ஏற்படும் பிழைகளை தடுக்க இந்தக் குறிப்புகளைப் பின்பற்றவும்.

- ஒவ்வொரு வருகையின்போதும் உங்கள் / உங்களுடைய குழந்தையின் எதிர் மருந்துகள் மற்றும் மூலிகை வைத்தியம் உட்பட தற்போதைய மருந்தின் புதுப்பித்த பட்டியலைக் கொண்டு வாருங்கள்
- மருத்துவமனைக்கு வரும் ஒவ்வொரு வருகையின்போதும் மருந்து சமரசம் (மேடிச்கேஷன் ரீகன்சிலியேஷன்) முடிக்கப்படுகின்றது. உங்களுடைய குழந்தை எடுத்துக் கொண்டிருக்கும் மருந்துகள் பற்றி உங்கள் ஆரோக்கிய பராமரிப்பு குழுவிற்கு தெரிவிப்பதற்கு மருந்து சமரசம் (மெடிகேஷன் ரீகன்சிலியேஷன்) ஒரு சிறந்த வழியாகும்.
- மருந்துகள் பற்றியும் ஏன் அவைகள் உங்களுக்கு / உங்கள் குழந்தைக்கு பரிந்துரைக்கப்பட்டக் கொண்டிருக்கின்றது என்பது பற்றிய கேள்விகளையும் கேளுங்கள்.
- ஹாலந்து ப்ளூர்வியூ அனைத்து மருந்துகளையும் ஒரே மருந்தகத்திலிருந்து வாங்கி பயன்படுத்துமாறு பரிந்துரைக்கிறது. இது உங்கள் சமுதாய மருந்தாளர் அனைத்து பரிந்துரைப்புகளைப் பற்றியும் அறிந்திருப்பதை உறுதிசெய்கிறது.



**வாடிக்கையாளர்கள் மற்றும் குடும்ப உறுப்பினர்கள் மருந்து பிழைகள் ஏற்படுவதை தடுக்க உதவ இயலும்.**

## வாடிக்கையாளர்களின் அடையாளம்

முதல் வருகையோ அல்லது ஒவ்வொரு வருடத்திலும் பல்வேறு முறை வருகை புரிந்தாலும், ஒவ்வொரு வருகையின்போதும் உங்கள் உடல்நலக் குழுவின் அனைத்து உறுப்பினர்களும் உங்களுடைய / உங்கள் குழந்தையுடைய இரு அடையாள விவரங்களை கேட்பார்கள். அடையாள விவரங்கள் பின்வருவனவற்றை உள்ளடக்கியதாக இருக்கலாம்: பெயர், பிறந்தநாள், தொலைபேசி எண், வீட்டு முகவரி, சுகாதார அட்டை எண்.

நீங்கள் / உங்கள் குழந்தை ஒவ்வொரு முறையும் சரியான சேவையினையும், சரியான சிகிச்சையினை பெறுவதையும் இது உறுதி செய்கிறது.

## பேசுங்கள்

ஹாலந்து ப்ளூர்வியூ உங்கள் குழந்தைக்கு அளிக்கப்படும் சுகாதார பராமரிப்பு சேவை பாதுகாப்பாக இருப்பதை உறுதி செய்ய கடமைப்பட்டுள்ளது, உங்களுக்கு எதேனும் கவலை இருப்பின், தயவுசெய்து உங்கள் குழந்தையின் சுகாதாரப் பாதுகாப்புக் குழுவின் உறுப்பினருடன் பேசவும், அல்லது நோயாளி பாதுகாப்பு மேலாளரிடம் பேச வேண்டும் என்று கேட்கவும்.

**ஏதேனும் கேள்விகள் அல்லது கவலைகள் இருப்பின் தயவுசெய்து நோயாளியின் பாதுகாப்பு மேலாளரை 416-425-6220 Ext. 6235 என்னும் எண்ணில் தொடர்பு கொள்ளவும்**